# பத்திரிக்கைச் செய்தி

பரவி வரும் கொரோனா வைரஸ் தொற்று நோயைக் கட்டுப்படுத்திட தமிழ்நாட்டில் 03.05.2020 அன்று வரை பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவானது 17.05.2020 வரை நீட்டிக்கப்படுவதாக ஆணையிடப்பட்டுள்ள நிலையில் அரசால் விலக்களிக்கப்பட்ட சிறு, குறு தொழில் நிறுவனங்கள், வணிக/தனியார் நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகள் இயங்கிட/ வணிகம் புரிந்திட அனுமதி, வாகன அனுமதி மற்றும் பணியாளர்கள் பயண அனுமதி பெறுவதற்கு **http://www.tnepass.tnega.org** என்ற இணையவழி மூலம் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் கீழ் செயல்படும் இ - சேவை மையத்தின் வாயிலாக எவ்வித கட்டணமுமின்றி பொதுமக்கள் விண்ணப்பிக்கலாம். மேலும் செல்பேசியிலும் இணையதள இணைப்பின் மூலம் விண்ணப்பதாரர்கள் விண்ணப்பித்துக் கொள்ளலாம். எனவே, இனி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு விண்ணப்பதாரர்கள் எவரும் நேரில் வர வேண்டாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மதுரை மாவட்டத்தில் விண்ணப்பதாரர்களின் நலனுக்காக பின்வரும் இ-சேவை மையங்கள் எவ்வித கட்டணமுமின்றி செயல்படவுள்ளன:-

| வ. எண். | வட்டம் | | | இ-சேவை மையம் செயல்படும் அலுவலகங்கள் |
|---|---|---|---|---|
| 01. | மதுரை வடக்கு | 06. | திருமங்கலம் | சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலகம் |
| 02. | மதுரை தெற்கு | 07. | மேலூர் | |
| 03. | மதுரை மேற்கு | 08. | வாடிப்பட்டி | |
| 04. | மதுரை கிழக்கு | 09. | உசிலம்பட்டி | |
| 05. | திருப்பரங்குன்றம் | 10. | பேரையூர் | |

| மாநகராட்சி அலுவலகம் | | |
|---|---|---|
| மண்டலம்-1 | மண்டலம்-3 | மாநகராட்சியின் தொடர்புடைய மண்டல அலுவலகம் |
| மண்டலம்-2 | மண்டலம்-4 | |

தற்போது ஊரடங்கு உத்தரவு அரசால் 17.05.2020 நீட்டிக்கப்பட்டுள்ளதால் மேற்கண்ட வணிக/தனியார் நிறுவனங்கள், தொழிற்சாலைகள் மற்றும் தொழிற் நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு ஏற்கனவே வழங்கப்பட்ட அனுமதி, வாகன அனுமதி மற்றும் பணியாளர்கள் பயண அனுமதி ஆகியன மறு உத்தரவு வரும் வரை செல்லத்தக்கதெனத் தெரிவிக்கப்படுகிறது. ஆகவே, மேற்படி அனுமதி பெற்றவர்கள் தற்போதுள்ள ஆணையினையே மறு உத்தரவு வரும் வரை பயன்படுத்திக் கொள்ளலாம். புதியதாய் அனுமதி கோருபவர்கள் https://www.tnepass.tnega.org என்ற இணையதள முகவரியில் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

(ஒ/-)

மாவட்ட ஆட்சித்தலைவர்
மதுரை

Scanned with CamScanner